
ரூ 5.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்

தமிழ் ஆண்டு 2039
புரட்டாசி - செப்டம்பர் 2008



கடமை
கண்ணியம்
கட்டுப்பாடு

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டுவிழா

தொடக்கம் 15-9-2008

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ. 5-00
ஆண்டுச் சந்தா	ரூ. 60-00
ஆயுட் சந்தா	ரூ. 600-00
புரவலர் கட்டணம்	ரூ. 1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :

website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :

சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ் ஆண்டு 2039	மாதம் : புரட்டாசி
மலர் : 23	இதழ் : 9

உண்மையான புகழஞ்சலி

தலைவர், தொண்டர் என்ற மரபை மாற்றி ஒரு தாய் வயிற்றில் பிறக்க முடியாத காரணத்தால், தனித்தனித் தாயார் வயிற்றில் பிறந்தாலும் ஒரு தாய் மக்களாய் உடன்பிறப்புகளாய் வாழ வழிகாட்டிய உலக இயக்கங்களில் எங்கும் காணாத ஓர் உன்னதத்தலைமை!

அவர் நா அசைந்தால் நானிலம் ஆர்ப்பரிக்கும்! எழுதுகோல் அசைந்தால் இமயம் தன் தலை தாழ்த்தும்!

கோடிக்கணக்கான மக்களின் விடியலுக்கான வழிகாட்டிய மகத்தான மந்திரச்சொல்.

அண்ணா! அண்ணா! அண்ணா!

1935ல் திருப்பூர் மாநாட்டில் தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் முதல் சந்திப்பு!

அண்ணாவின் பேச்சைக் கேட்ட மாத்திரத்தில் கிறுகிறுத்துப் போனார் தந்தை பெரியார்! பட்டதாரி இளைஞரான அண்ணாவிடம் "என்ன செய்யப் போகின்றாய்?" பெரியாரின் கேள்வி. "வயிற்றுக்கு வழி தேடும் வேலையில் ஈடுபடாமல் ஏழை மக்களின் வாழ்க்கை விடியலுக்காகப் பொதுவாழ்வில் ஈடுபடப்போகின்றேன்". என்று பேரறிஞர் அண்ணா அறிவித்தார்!

வயிறே வாழ்வாகிப் போனவர்கள் ஒருபுறம்!
மூளைக்குள் முடங்கிப் போனவர்கள் ஒருபுறம்!

இவற்றுக்கிடையே எதையும் தாங்கும் இதயமாய், மக்கள் பணியே மகேசன் பணி என்ற இலட்சியத் துடிப்பு, இளைஞர் அண்ணாவின் இதயத்தில் துடித்துக் கொண்டிருந்தது!

எத்தனை உயர்ந்த பணிகள் அண்ணாவைத் தேடி நாடி வந்தன! அத்தனையும் புறம் தள்ளி, மக்கள் நலவாழ்வே தம் வாழ்வாய் அண்ணா வாழ்ந்தார்!

மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று, எதிரியின் நற்பண்பைப் போற்றும், அரசியல் நாகரிகம் படைத்தவர் அறிஞர் அண்ணா! எதிரிகள் வசைச் சொற்களால் தேளாய்க் கொட்டினாலும், தான் தேனாய் இசைச் சொற்களை மொழிவார்! நேருபெருமான் கொட்டிய கடும் சொற்களுக்கு நாடே கொதித்து எழுந்த போது அண்ணா அடக்கமாய்ச் சொன்னார் :

"நேரு அவர்கள் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம்;
நான் கொட்டிக் கிடக்கும் செங்கல்" என்றார்.

"நந்தவனத்தில் நாய் இறந்து கிடந்தால் நாயை அப்புறப்படுத்த வேண்டுமே ஒழிய நந்தவனத்தை அழிக்கக்கூடாது" என்று தேர்தல் பிரச்சாரத்தில் தமிழ்த் தென்றல் திரு.வி.க கூறினார்! "நாய் இறக்கின்ற அளவிற்கு நந்தவனத்தில் விஷச்செடிகள் மண்டிக்கிடந்தால் மனிதர்கள் என்ன ஆவார்கள், எனவே, விஷச்செடிகள் உள்ள நந்தவனத்தை அகற்றியே ஆக வேண்டும்" என்று அண்ணா கூறினார்!

நோய்வாய்ப்பட்ட பட்டுக்கோட்டை அழகிரிக்கு நிதி உதவி செய்தும், பாவேந்தர் பாரதிதாசனுக்கு நிதி உதவி செய்தும், கொழுகொம்பாய் விளங்கினார் "அறிஞர் அண்ணா"

தனக்கு அறிமுகமோ, பழக்கமோ இல்லாத, கோவா விடுதலைப் போராட்டப் போராளி ராணடேயின் விடுதலைக்கு வித்திட்டார் "அறிஞர் அண்ணா"

அண்ணா அவர்கள் போப் ஆண்டவரைச் சந்தித்தபொழுது, போப் ஆண்டவர் என்ன பரிசு வேண்டும் என்று அண்ணாவைக் கேட்டார். அப்போது "கோவாவில் சிறைப்பட்டுள்ள ராணடே விடுதலை ஆக வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார். ராணடே விடுதலை ஆகித் தமிழகத்திற்கு வந்தபொழுது, அண்ணாவின் கல்லறையில் தான் தன் கண்ணீர்ப் பூக்களை காணிக்கை ஆக்க முடிந்தது. எளிமையின் ஏந்தலாய் அண்ணா விளங்கினார்.

தோற்றத்தில் எளிமை;
பழகுவதில் இனிமை;
சொல்லில் வளமை;
செயலில் செம்மை;
அவர்தான் அண்ணா!

91/1

மருத்துவர்கள் அண்ணாவின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு குளிர் சாதனம் பொருத்தப்பட்ட இல்லத்தில் தங்க வேண்டும் என்று வலியுறுத்திய பொழுது அதை ஏற்கமறுத்தார். அதுவே அவர் உடல் நலிவுக்கு மேலும் காரணம் ஆகியது!

மரணப்படுக்கையில் அண்ணா! எமன் எட்டிப் பிடிக்கக் காத்திருக்கின்றான்! காலன் காலடியில் நின்று கொண்டிருக்கின்றான்! மருத்துவர்கள் அறுவை சிகிச்சையை அவசரமாய் நிச்சயித்திருக்கிறார்கள்! அண்ணா "இந்த அறுவை சிகிச்சையை நாளை வைத்துக் கொள்ளலாமா?" என மருத்துவர்களிடம் கேட்டார்! மருத்துவர்கள் ஏன்? எதற்கு? என்ன காரணம்? என்று பதறிப் போய்க் கேட்டார்கள்! அண்ணா சொன்னார்! "நான் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கின்றேன். இன்று ஒரு நாள் அவகாசம் கிடைத்தால் , இந்தப் புத்தகத்தைப் படித்து முடித்துவிடுவேன். நாளை அறுவை சிகிச்சை நடந்து அது தோற்றுப்போனால் கூட அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்தவனாகவே விடை பெற்றுவிடுவேன்" என்று கூறினார்!

லெனின் மறைவைப் பற்றி சோவியத் தேசம், லெனின் சிந்திக்க மறந்து போனார் என்று அறிவித்ததைப் போலவே அண்ணாவின் மறைவும் அமைந்திருந்தது! அண்ணா வாசிப்பதையே, சுவாசிப்பதாகக் கொண்டிருந்தார்!

செல்வச் சீமான்களின் இருப்பிடமாய் இருந்த நீதிக் கட்சியை, சாமான்யர்களின் சமத்துவ சமூக நீதிக்கட்சியாக சரித்திரம் படைத்தார் "அண்ணா"! செல்வந்தர்களின் பணம் குஷ்டரோகியின் கையில் உள்ள வெண்ணெய் என்பது தான் அண்ணாவின் கருத்து!

செல்வந்தரிடம் பெறப்படும் உதவி ஏழைகளைப் பாதிக்கும் நிலைக்கும் கொண்டு செல்லும் என்று, அப்படிப்பட்டவர்களின் உதவிகளைப் புறக்கணித்தார்!

அண்ணா எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது மிகவும் புகழ்பெற்ற நேரம்! இலட்சக் கணக்கான மக்கள் அண்ணாவின் பேச்சிற்குத் தவம் கிடந்த நேரம்! காவல் துறை அலுவலர் அருள் என்பவர் அண்ணா உள்ளிட்ட ஐவரை எந்த முகாந்திரமும் இல்லாமல், காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று நிற்கவைத்து மிகவும் தரக்குறைவாக நடத்தினார்! அண்ணாவின் விழி அசைவிற்கும், விரல் அசைவிற்கும், நா அசைவிற்கும் கோடிக் கணக்கானோர் காத்துக் கிடக்கும்பொழுது,

காவல்துறை அலுவலர் அருள் விரல்களைச் சொடுக்கி அழைத்து, சிகரெட் புகைத்துக் கொண்டே, அண்ணாவை உம் பெயர் என்ன? என்று கேட்டு அநாகரீகமாய் நடந்து கொண்டார்! அண்ணா முதல் அமைச்சராய்ப் பொறுப்பேற்கவும், அருள் தமது ராஜினமாக் கடிதத்தை அனுப்பினார்! பரந்த மனத்துக்குரிய அண்ணா, ஆட்சி மாறலாம் அதற்காக அதிகாரிகள் அலுவலர்கள் மாறத் தேவையில்லை, என்று அவரை அதே பணியில் நீடிக்க அனுமதித்தார்!

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

என்பதன் இலக்கணத்திற்கு, இலக்கியம்தான் "அண்ணா".

தாய் குழந்தைக்குப் பெயர் சூட்டுவது தான் மரபு! பிள்ளைகள் தாய்மண்ணிற்குப் பெயர் சூட்டிய பெருமை, சென்னை ராஜதானி, தமிழ்நாடு என்று அழைக்கப்பெற்ற பெருமை, அண்ணாவின் சாதனைகளில் எல்லாம் சரித்திரம் படைத்த சாதனை! கடவுளே முன்நின்று நடத்தினாலும், சடங்குகள் இல்லாத திருமணம் செல்லுபடியாகாது என்று சட்டம் சொன்ன பொழுது புகையும், கூச்சலும் இன்றி, மனமும், மனமும் இணைகின்ற சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்கிய பெருமை அண்ணாவுக்கே உண்டு!

அண்ணாவின் உரைகள் உலகப்பந்தை உலுக்கியவை! உலகத்தை உலுக்கிய உரைகள், உலகத்தை அழ வைத்த இரங்கல் உரைகள் ஏராளம்! கல் நெஞ்சையும் கரைய வைக்கும் கண்ணீர் உரைதான் அண்ணாவிற்கு கலைஞர் ஆற்றிய இரங்கல் உரை!

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று சொன்ன அண்ணாவிடம், இதயத்தை இரவலாகப் பெற்று, தந்தை பெரியாரின் சிந்தனைகள் காற்றில் மறைந்து போய்விடாமல் தம், ஆட்சிச் சக்கரத்தின் வழியே அவற்றை செயலாக்கிய பெருமை பெரியார் விருது பெறும் பெரியார் கலைஞருக்கு உண்டு! கலைஞர் வழியே அண்ணாவின் அன்பு இதயம் நடத்திய ஆட்சி, கடைக்கோடி மக்களின் வாழ்க்கை மலர்ச்சி! என்பதே அண்ணாவின் நூற்றாண்டில் அண்ணாவிற்கு செய்கின்ற உண்மையான புகழ் அஞ்சலி ஆகும்!

அண்ணா புகழ் வாழ்க! வளர்க!

(கையொப்பம்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

91. பெண் வழிச் சேறல்

ஒரு தலைமகன் காமத்தின் காரணமாக மட்டும் எடுத்துக் கொண்ட துறையில் தன் மனைவியின் பேச்சைக் கேட்டு நடத்தல் தீமையைத் தரும் என்றவாறு. இந்த அதிகாரம் பெண்ணடிமைத் தனத்தை உறுதிப்படுத்துமா எனில் இல்லை. தாம் எடுத்துக் கூறப்போகும் செய்திகளில் மனைவிக்கு அறிவும் தெளிவும் இருந்து தற்சார்பு இல்லாது கூறின் ஆண் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளல் கடைமை என்பதறிக.

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. (901)

புலனுகர்ச்சி வழிப்பட்ட காமம் காரணமாக மனைவி சொல்வதைக் கேட்போன் மாட்சிமைக்குரிய பயனை அடைய மாட்டான். சிறந்த முயற்சிகளை விரும்புவாருக்கு, பெண்வழிச் செல்லுதலாகிய மனையறம் வேண்டற்பாற்றன்று.

"வேண்டாப் பொருள்" - வாழ்க்கைக்கு மாண்பினைச் சேர்க்காத மனைவி, வேண்டாத பொருள் என்று உணர்த்தியது.

பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். (902)

ஆண்மை நலம் பேணாது, காமத்தையே கருதி, பெண்ணை விரும்புவானின் செல்வம் நாணத்தைத் தரும். இயல்பாக மனைவி, வினைமேற்சென்று பொருளீட்டலையும் வழங்கி வசையொழிய வாழ்தலையும் விரும்புவதில்லை. அதனால் செல்வத்தின் பயன் இல்லாமற் போகிறது. அதனால் செல்வம் நாணுவதாகக் கூறினார்.

இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். (903)

தனது மனைவியிடம் தாழ்ந்து செல்லும் அச்சமுடையோன் எப்போதும் நல்லாரைக் காண்புழி நாணப்படுவான். இத்திருக்குறளில் இயல்பின்மை என்ற சொற்றொடரில், "இன்மை" என்ற சொல் வேண்டுவதன்று.

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று. (904)

மனைவியைக் கண்டு அஞ்சுபவன் மறுமையின்பத்தை இழப்பதுடன் தாம் செய்யும் செயல்களில் வெற்றி பெறுதலும் அரிது.

இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். (905)

மனைவிக்கு அஞ்சுபவன் என்றும் நல்லவர்களுக்கு நல்லது செய்ய அஞ்சுவான். தாம் உழைத்து ஈட்டிய பொருளேயாயினும் காமம் மீதூர, மனைவிக்கு அஞ்சுபவன் உரிமையோடு நல்லது செய்யத் துணியாது அஞ்சுவான்.

இமையாரின் வாழினும் பாடுஇலரே இல்லாள்
அமைஆர்தோள் அஞ்சு பவர். (906)

தமது மனைவியின் தோளுக்கு அஞ்சுபவர்கள் தேவரைப் போலக் குறைவிலாத பெருமையுடன் வாழ்ந்தாலும் பெருமை இல்லை. "தோளுக்கு அஞ்சுதல்" - தன் மனைவியின் தோளில் சாய்ந்து நுகரும் இன்பம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம் என்று கொள்வதே சிறப்பு. "அடிக்குப் பயப்படுதல்" என்ற பொருள் தவறில்லையாயினும் சிறப்பு இல்லை.

பெண்ஏவல் செய்துஒழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து. (907)

தன் மனையாள் ஏவும் பணிகளைச் செய்து ஒழுகுவானினும் நாணமுடைய பெண்பிறப்பே பெருமையுடையது.

நட்டார்குறைமுடியார் நன்றுஆற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர். (908)

தன் மனைவியின் பேச்சைக் கேட்டு ஒழுகும் ஒருவன், தனது நண்பர்களின் குறையை நிறைவு செய்யமாட்டான்; நல்லது செய்யமாட்டான்.

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல். (909)

மனைவியின் சொல் கேட்டு நடப்பவனிடத்தில் அறம் செய்தல் இல்லை; நிறைந்த பொருள் இல்லை; தாம் உவக்கும் செயல்கள் இல்லை.

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். (900)

பயனுடைய பணிகளை எண்ணிச் செய்யும் நெஞ்சுறுதி யுடையோர்க்கு, என்றும் பெண்ணைச் சேர்தலாகிய பேதைமை இல்லை. "பெண் சேர்ந்தாம் பேதைமை" - காமம் விழைதல்; ஏவல் கேட்டு ஒழுகுதல்.

(தொடரும்)

புலவர் நாவை. சிவம் அவர்களுக்கு "தமிழ்மாமணி" விருது

தஞ்சாவூர் - மாரியம்மன்கோயில் தமிழ்த்தாய் அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற கலைஞர் படைப்பிலக்கிய ஆய்வுக் கருத்தரங்கு விழாவில் பலதுறைச் சாதனையாளர்கள் சிறப்பிக்கப்பெற்றனர். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் கலைஞர் படைப்பாற்றல் நயம் பாராட்டியபின், மணற்பாறை திருக்குறள் பயிற்றக நிறுவனரும் உலகத் திருக்குறள் பேரவை மாநிலச்செயற்குழு உறுப்பினருமாகிய புலவர் திருக்குறள் **நாவை. சிவத்தின்** பல்லாண்டுக் காலத் தமிழ்த் தொண்டைப் போற்றி, "**தமிழ்மாமணி**"எனும் சிறப்பு விருது வழங்கினார்கள். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் மாண்புயர் இராசேந்திரன் செம்மொழி உராய்வுமைய உறுப்பினர் வா.மு. சேதுராமன் உடையார் கோவில் குணா ஆகியோர் முன்னிலை ஏற்றிருந்தனர்.

காசித் திருநகரம்

(முனைவர்.கடவூர். **மணிமாறன்**)

வரலாற்றுப் புகழ்வாய்ந்த நகரம் காசி
வற்றாத பேராறு கங்கை இங்கே.
பரபரப்பே இல்லாமல் பாய்ந்து சென்றே
பசுமையினை நாடெங்கும் விதைக்கும்! நீண்டு
பரந்திருக்கும் பெரும்பரப்பில் திகழும் இந்துப்
பல்கலைமாக் கழகத்தின் மாட்சி எல்லாம்
நறுமலரின் மணம்போல நெஞ்சை அள்ளும்
நண்ணிடுவர் வெளிநாட்டார் நாளும் இங்கே!

பழம்பெருமை முடிசூட்டிக் கொண்டி ருக்கும்
பல்கலைநற் கழகமிது! துறைகள் யாவும்
அழகொளிர அருமையுடன் அறிஞர் போற்ற
ஆங்காங்கு பறைசாற்றிப் பெருமை சேர்க்கும்!
கிழக்கிருந்தே எழும்சுடராய்ச் சிறப்புப் பெற்றக்
கீழைநாட்டு மொழிபலவும் பயிற்று வித்தே
முழக்கமிடும் இக்கழகம் அறிவுக் கோயில்
மூத்தபழம் புகழ்க்கோட்டம் மறுப்பார் இல்லை!

விடுதலைப்போர் நடைபெற்ற காலம் தன்னில்
வேங்கையென வெகுண்டெழுந்த கவிஞன் யார்க்கும்
நடுங்காமல் ஒடுங்காமல் ஆங்கி லேயர்
நாடாண்ட நேரத்தில் எதிர்த்து நின்றே
வெடிக்கின்ற துமுக்கியெனப் பாடல் யாத்து
வெங்களத்தில் போர்முரசம் ஆர்த்து வந்த
மிடுக்குடைய பாரதியோ நான்காண் டாக
மேன்மையுற இந்நகரில் வாழ்ந்து வந்தான்!

பெருந்தலைவர் பெரியாரோ புரட்சி யாளர்!
பிணக்குடனே சிலகாலம் அமைதி நாடி
விருந்தினராய் இந்நகரில் வாழ்ந்த தாக
விதந்துரைக்கும் வரலாறு! தொன்மை சான்ற
பெருநகரின் கட்டடங்கள் வீடு யாவும்
பேசிடுமே பழமையினை என்னும் வண்ணம்
உருண்டோடும் மிதிவண்டி கைரிக் சாவும்
உலாநடத்தும் ஊர்திகளாய் உவகை சேர்க்கும்!

துறவியர்கள் பெருங்கூட்டம் இங்கே உண்டாம்
தூயகாவி உடையுடனே கங்கை ஆற்றின்
கரையோரம் வழிபாடு நாளும் செய்யும்
கலைநகரம் இதுவாகும்! சந்தும் பொந்தும்
நிறைந்திருக்கும்! நடுத்தெருவில் நிற்கும் மாடோ
நெடுஞ்சிலையாய் எவருக்கும் தீங்கு செய்யா!
பெருமைமிகு பட்டுக்கோ எந்த நாளும்
பெயர்போன திருநகரம் காசி அன்றோ?

காசிநகர் என்றவுடன் விசுவ நாதர்
கலைஅன்ன பூரணியின் கோயில் மற்றும்
பேசரிய விசாலாட்சி பிர்லா மந்திர்
பெருங்கால பைரவர்நற் துர்கா கோயில்!
வீசுபுகழ் நினைவில்வரும்! குமரர சாமி
விளங்கும்சீர்த் திருமடமும் பெருமை சேர்க்கும்!
மாசற்ற தூய்மைமிகு நகரம் என்றே
மன்பதையோர் கூறும்நாள் எந்த நாளோ?

மண்குவளை தனில்வழங்கும் தேநீர் கூட
மணம்நல்கும்! மனச்சோர்வை இனிதே போக்கும்;
கண்கவரும் பலபொருள்கள் கடைகள் தோறும்
காட்சிதரும் காண்போரைச் சொக்க வைக்கும்!
எண்ணமுடி யாதபடி பிணங்கள் எல்லாம்
இரவுபகல் கங்கையிலே பயணம் செய்யும்!
திண்மைதரும் கோதுமையில் பாலில் ஆக்கும்
தெவிட்டாத இனிப்புவகை கிடைக்கும் எங்கும்!

கரையாது காகங்கள்! வானில் செல்லும்
கழுகுகளும் பறக்காது! கனவாய்ப் போன
இறந்தஉடல் நாறாது! பூத்தி ருக்கும்
எழில்மலரும் மணக்காது இங்கே என்னும்
சிறப்புகளைப் பெற்றநகர் இதுவே என்று
செப்பிடுவர்! எந்நாளும் இந்தி யாவின்
பிறபகுதி மக்களெலாம் வருகை நல்கும்
பெருநகரம் வளர்பிறையாய்ப் பொலிந்து வாழ்க!

வாசகரும் - வாய்மொழியும்

(பெரும்புலவர். **ப. அரங்கசாமி**)

மணிவாசகரின் வரலாற்றில் அவரைச் சார்ந்து நிகழ்ந்த "தன்நிகழ்வுகள்" சில அவர் வாய்மொழியாகக் கூறப்பட்டுள்ளன. அகச்சான்றுகள் அவை.

1. குதிரை வாங்கச் சென்ற மணிவாசகர் இடையில் திருப்பெருந்துறையில் குருவாக வந்த இறைவன் அருள் செய்தல் : (அதனால் குதிரை வாங்கவில்லை)

"அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமை"

- போற்றித் திருவகவல். 75-76

"திருப்பெருந்துறையில் நிறைமலர்க்
குருந்த மேவிய" - அருட்பத்து-1

2. குதிரை வாங்கி வராததால் மன்னன் மணிவாசகரை வையையாற்றின் சுடுமணலில் நிறுத்தித் துன்புறுத்தியபோது இறைவன் வையையில் வெள்ளம் பெருகச் செய்தான். ஆற்றுக்கரை உடைப்பெடுக்க, அதை அடைக்க இறைவன் மணிவாசகருக்காக அவரைப் போல் வடிவத்துடன் வந்து பிட்டுக்கு மண் சுமந்ததும் பாண்டியன் தண்டால் அடித்ததால் புண்பட்டதும் :

" மண்பால் மதுரையில் பிட்டமுது செய்தருளி"- பூவல்லி-16
"தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட" - பூவல்லி-16
"மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவான் மொத்துண்டு" -
அம்மானை - 8.

"புண்சுமந்த பொன்மேனி"
"பாங்காய் மண்சுமந்து அருளிய பரிசும்" - கீர்த்தி-47

3. **நரிகளைப் பரிகளாக ஆக்கியது :**

"நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்" - கீர்த்தி-36

"நரிகளெல்லாம் பெருங்குதிரை ஆக்கியவாறு" - ஏசறவு-1
"நரியைக் குதிரையாக்கி" - ஆனந்தமாலை -7

4. **நரிகளைக் குதிரைகளாக ஆக்கி அக்குதிரைகளைக் குதிரைச் சேவகனாய் மதுரைக்கு ஓட்டிக்கொண்டு வந்தது :**

"பரிமேற் கொண்ட சேவகனாய்" - திருப்பாண்டி-1
"கழுக்கடை கைப்பிடித்துக் குதிரைமேல் வந்து" - திருப்பாண்டி-2
"பரிமேற் கொண்ட பாண்டியனார்" - திருப்பாண்டி-3
"மாயவனப் பரிமேற்கொண்டு" - திருப்பாண்டி-7
"பாண்டியனார் புரவியின் மேல்வர" - திருப்பாண்டி-9
"புரவியின் மேல் வந்து" - பண்டாய நான்மறை -2
"நாட்டிற் பரிபாகன்" - பண்டாய நான்மறை-3
"மாவேறி வையகத்தே வந்திழிந்த" - திருவெண்பா-9
"பரிமேல் வருவானை" - குயில்-6
"பரிமிசை வந்த வள்ளல்" குயில்-6
"தாவிவிடும் பரிப்பாகன்" குயில்-8
"மாவார ஏறி மதுரைநகர் புகுந்தருளி" பூவல்லி-20
"குதிரையைக் கொண்டு குடநாடதனில்" கீர்த்தி-27
"குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்" கீர்த்தி-45
"பரிமாவின் மிசைப் பயின்ற வண்ணமும்" கீர்த்தி -116
"கொற்றக் குதிரையின் மேல் வந்தருளி" அம்மானை-20
"பந்தம் பறியப் பரிமேற் கொண்டான்" அம்மானை-3

5. **இறைவன் திருவடி கண்டதும் சென்னியில் வைத்ததும் :**

"கண்ணால் யானும் கண்டேன் காண்க" - திருவண்டப்பகுதி -58
"புவியினில் சேவடி தீண்டினன் காண்க" - திருவண்டப்பகுதி -61
"இன்றெனக்கு எளிவந்த தருளி" - திருவண்டப்பகுதி -117
"மறையோர் கோலம் காட்டி அருளலும்" - திருவண்டப்பகுதி-149
"இங்கழல் சென்னியில் வைத்த சேவக" - போற்றி -129-30
"உடையாய் நின்பாதம் சேரக்கண்டு" - சதகம் அனுபோகசுத்தி-6
"என்சிந்தையுட் புகுந்து பூங்கழல் காட்டிய பெருமை" -
பிடித்தபத்து-7
"அடியேற்குன் பாதமலர் காட்டியவாறு" - ஏசறவு -3

"கண்ணார உய்ந்தவாறு அன்றேவுன் கழல்கண்டே" - ஏசறவு-2

"திருவடியென் தலைமேல் வைத்தபிரான்" - பூவல்லி -10

"படமாக என்னுள்ளே தன்னிணைப்போது அவையளித்து"

- பூவல்லி-14

6. **பாதச் சிலம்பொலி காட்டியது :**

"வாத வூரில் வந்தினி(து) அருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்" - கீர்த்தி -52-53

7. **திருவாரூரில் ஞானம் பெற்றது :**

"தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்" - கீர்த்தி -73-74

8. **தில்லையம்பலத்தில் இறைவன் வாவென்று அழைத்து ஆட்கொண்டது :**

"நாயினேனை நயமலி தில்லையுள்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித்(து) அருளி" - கீர்த்தி -127-29



அண்ணா தனக்கோ தன் குடும்பத்தினருக்கோ எந்த விதமான சலுகைகளும் வழங்கக் கூடாது என்பதில் உறுதியாக இருநதார். அதிகாரப்பற்று அற்றவராக, பதவியில் தொடர விரும்பாதவராகத் தனது கருத்துக்களைத் தெரிவித்து வந்தார்.

அண்ணா பதவிப் பற்றற்றவர், மக்களுக்குப் பணியாற்றுவதில்தான் குறியாக இருந்தார். அதுபோல, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை என்றால் பதவி விலகுவது என்கிற மனப்பக்குவம் கொண்ட அரசியல்வாதி இன்றைய சூழ்நிலையில் யாராவது இருப்பார்களா? பதவி மீது மட்டுமே குறியாக இல்லாமல், ஆட்சி, பதவி என்றாலே மக்களுக்குத் தொண்டாற்ற மட்டுமே என்கிற மனப்போக்கு பேரறிஞர் அண்ணாவின் தனிச்சிறப்பு.

- செ. மாதவன்
(முன்னாள் அமைச்சர்)

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் பிற ஆக்கங்களில் இடம்பெறும் கருத்துக்களுக்கு அதனதனை எழுதியோர்களே பொறுப்பாவர்.

- ஆசிரியர்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தமிழ் அருச்சனை

(மகாவித்துவான். **சி. அருணைவடிவேல் முதலியார்**)

மதுரை ஆலவாய்ப் பெருமான் பாணபத்திரருக்குப் பாடிக் கொடுத்த திருமுகப் பாசுரம் பதினொன்றாந் திருமுறையின் முதற் பாடலாக இருந்து அணி செய்கின்றது.

தில்லைக் கூத்தப் பெருமான் பெத்தான் சாம்பனுக்குத் தீக்கை முறையால் முத்தி கொடுக்கும்படி தமிழில் எழுதி விடுத்த சீட்டுக்கவி சந்தானாசாரியரது வரலாற்றின் இடையில் இடம் பெற்று விளங்குகின்றது.

சேரமான் பெருமாள் நாயனார் அருளிச்செய்த ஞான உலாவாகிய ஆதியுலா ஆந்நாயனரால் திருக்கயிலையில் சிவபெருமான் திருமுன்பில் கூடியிருந்த சிவகணப் பேரவையில் அரங்கேற்றப் பெற்றது.

இன்னோரன்ன பல நிகழ்ச்சிகளால் தமிழ் மொழியின் தெய்விகத் தன்மை தெற்றென விளங்கும். ஆகவே, திருக்கோயில்களில் தமிழ் அருச்சனையை அனுமதிக்க முடியாது? எனக் கூறுதற்குக் காரணம் எதுவும் இல்லை.

திருஞானசம்பந்தர் தமது திருவாலவாய்த் திருப்பதிகத் திருக்கடைக்காப்பில்,

"போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாயகேள்வி ஞானசம் பந்தன்நல்ல பண்பினால்
ஆயசொல்லின் மாலைகொண்டு ஆலவாயில் அண்ணலைத்
தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே"

எனச் "சிவபெருமானைத் தமது பாடல் வழியாகத் தியானிப்பவன் உள்ளங்களில் அப்பெருமான் இனிது விளங்கி நிற்பான்" என அருளிச் செய்தார்.

"சலம்பூவொடு தூபம் மறந் தறியேன்
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்"

என்று அப்பர், தாமே தமிழ்ப் பாடலால் இறைவனை வழிபட்டதாகக் கூறியுள்ளார்.

சுந்தரர்

"நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்
கரையனும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானை" - திருமுறை 7-67.5.

எனச் சம்பந்தர், அப்பர் பாடல்களைக் கொண்டு துதிப்பதைச் சிவபெருமான் மிகவும் விரும்புவான் என அருளிச்செய்தார்.

பேரூர் ஆதீன முதல்வர் சாந்தலிங்க அடிகள் தமது வைராக்கிய சதகத்தில்,

"ஒழித் திடும்பவப் பகைவிரைந்து உள்ளமே
ஓதுமூ துணர்வோர்முற்
பழிச்சு பாடலை அரற்குஅவை விடர்க்குஇளம்
பாவையர் உரைபோலும்!
கழித்தி டேல்உப சாரம்என்று இதனைநீ
கட்டுரை எனக் கொள்வாய்;
விழித்து மாரனை எரித்த தே அருள்பெறும்
விருப்பினர் விருப்புஈதே". பாடல் - 49.

என்று நால்வர் தமிழைச் சிறப்பித்துள்ளார்கள்.

மூதுணர்வோர் என்பது "நால்வர் முதலானவர்" என உரை வகுக்கப்பட்டுள்ளது.

துறை மங்கலம் சிவப்பிரகாச அடிகள் தமது திருவெங்கை உலாப் பிரபந்தத்துள் சிவபெருமானை

"வேத உணவு வெறுத்துப் புகழ்மூவர்
ஓதுதமிழ் ஊணுக்கு உழல் செவியான்" (கண்ணி-27)

என வருணித்தார்.

"புனலில் ஏடுஎதிர் செல்எனச் செல்லுமே
புத்த னார்தலை தத்துஎனத் தத்துமே
கனலில் ஏடுஇடப் பச்சென்று இருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்புபொன் பாவையது ஆக்குமே
சின்அரா விடம் தீர்கஎனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே".

தலைகொள் நஞ்சமுது ஆக விளையுமே
தழல்கொள் வீடு தடாகமது ஆகுமே
கொலைசெய் யானை குனிந்து பணியுமே
கோள ராவின் கொடுவிடம் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவு தானும் கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியில் கல்லும் மிதக்குமே
அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.

வெங்கரா உண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை யானையின் மீதுஏறிச் செல்லுமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட்டு நிற்குமே
செங்கல் ஆனது தங்கமது ஆக்குமே
திகழும் ஆற்றிடச் செம்பொன் எடுக்குமே
துங்க வாம்பரி சேரற்கு நல்குமே
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே.

பெருகும் வையை தனைஅழைப் பிக்குமே
பிரம்ப டிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரிஎ லாம்பரி ஆக நடத்துமே
நாடி மூகை தனைப்பேசு விக்குமே
பரிவில் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே
பரமன் ஏடுஎழுதக் கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே !

என்ற பழம்பாடல்கள் நால்வர் தமிழால் விளைந்த அற்புதங்களை எடுத்துரைக்கின்றன.

திருமுறைத் தமிழ்ப் பெருமை பற்றி இன்னும் எத்தனையோ மேற்கோள்களைக் காட்டலாம். அவ்வாறிருக்க, இதுபொழுது தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் "தமிழில் அருச்சனை செய்யப்படவேண்டும்" என்று குரல் எழுப்பப்படுவதைச் சிலர் ஏன் எதிர்க்கிறார்கள் என்பது புரியவில்லை.

அருச்சனைப் பலன்

"ஆரிய வழி அருச்சனை நெடுங்காலமாக இருந்து வருகின்றது; மாற்றலாகாது" என்பவர்கள் ஒன்றை நினைவு கூர்தல் வேண்டும்.

"யாதொரு செயலும் அது நல்லதாயினும் தீயதாயினும் அறிந்து செய்தால்தான் பயனைத் தரும்; அறியாது செய்தால் பயன் தராது" என்பது சமயக் கோட்பாடு. மாணிக்கவாசகரும், "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின்" என துதிப் பாடல்களைப் பாடும்பொழுது பொருள்தெரிந்து பாடுதல் வேண்டும்" என வலியுறுத்தினார்.

அறிந்துசெய்யும் செயல்கள் "புத்திபூர்வகம்" என்றும், அறியாது செய்யும் செயல்கள் "அபுத்தி பூர்வகம்" என்றும் சொல்லப்படும்.

திருக்கோயில்களில் அர்ச்சகர்கள் அன்பர்கட்காக அர்ச்சனை செய்யும் பொழுது முதற்கண் செய்யப்படும் "சங்கல்பம்" என்பது அர்ச்சனை புத்தி பூர்வகமாதல் வேண்டும் என்னும் கொள்கை அடிப்படையில்தான் செய்யப்படுகின்றது. ஆயினும், அதனை வடமொழியில் சொல்வதால், அருச்சனையின் பலனைப் பெற வேண்டியவர் தமக்குத் தெரியாத மொழியில் சொல்கின்றார் ஆதலின் அஃது எவ்வாறு புத்தி பூர்வகமாக முடியும்? மேலும், "இந்த அருச்சனையை நான் அர்ச்சகர் வழியாகச் செய்கிறேன்" என்கிற வாசகத்தின் பொருளே அவருக்குத் தெரியாத பொழுது, அந்த அர்ச்சனை எப்படி அவர் செய்வதாக ஆகும்? ஆகாதபொழுது அதன் பயனை அவர் எப்படி அடைய முடியும்? அர்ச்சனையை விரும்பிச் செய்கிறவருக்கு அதனை நிஷ்பலத்ததாக அஃதாவது பயனற்றதாக ஆக்குவதுதான் முறையோ? பொருளைத் தந்தவர்க்குப் பயன் பெறாத நிலையை உண்டாக்குவது நீதிக்குப் புறம்பான செயலுமாம் அன்றோ? ஆயினும் இவ்வாறான செயலே திருக்கோயில்களில் இப்பொழுது அன்றாட நிகழ்ச்சியாக நிகழ்ந்து வருகின்றது. "இதனை மாற்றவும் கூடாது" என்கின்றார்கள்.

(தொடரும்)

புத்தகத் துணைதான் பொன்றாத துணை

பொற்கிழிக் கவிஞர் காசிஸ்ரீ அரு.சோ.வின் நூறாவது நூல் வெளியீட்டு விழாவில் தவத்திரு பொன்னம்பல அடிகளார் உரை!

16.8.2008 ஆம் நாளன்று தேவகோட்டை நால்வர் கோவிலில் கவிஞர் காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன் எழுதிய நூறாவது நூலாகிய "கந்தபுராணம்" உரை நூலைத் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வெளியிட்டுப் பேருரை ஆற்றினார்கள். அருசோ-நீலா நூலகத்தின் மூன்றாம் ஆண்டுவிழா, நூல் வெளியீட்டு விழா, அருசோவின் எழுபத்து மூன்றாம் ஆண்டு பிறந்தநாள் விழா என்று "முப்பெரும் விழா"வாக அமைந்த இந்த விழாவில் தவத்திரு அடிகள், நூலகத்திற்கும், நூலகத்தை உருவாக்கிய கவிஞர் அருசோ தம்பதியருக்கும், கவிஞர் பிறந்த நாளுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்தார்கள்.

"தேவகோட்டையில் அமைந்துள்ள நால்வர் கோவிலுக்குள் ஐந்தாவதாகப் புத்தகமும் வீற்றிருக்கிறது; வீற்றிருக்கச் செய்து மக்களை, இளைஞர்களை, மாணவர்களை படிக்குமாறு ஆற்றுப்படுத்தும் சேவை மகத்தான சேவை" என்று அடிகள் சுட்டிக்காட்டினார்கள். "எல்லோரும் நடந்தால், அது சாதாரணமான நடை; ஆனால் நமது அருசோ நடந்தால் அது ஆன்மிக நடை" (பலத்த கைதட்டல்) ஏன் என்றால் நூறு புத்தகங்கள் வழியே, ஆயிரக்கணக்கான உரையரங்கம் வழியே ஆயிரக்கணக்கான கவியரங்குகள் வழியே, நம் கவிஞர் அருசோ மக்களைச் சிந்திக்கத் தூண்டியிருக்கிறார்; கருத்தாலும் சிந்தனையினாலும் அவர் தானும் நடந்து இந்தச் சமுதாயத்தையும் இயக்கி நடக்கச் செய்திருக்கிறார்; அதுவும் எப்படிப்பட்ட நடை? ஆன்மிக நடை; அறமும் அறிவும் சார்ந்த நடை; அதனால்தான் அருசோவின் நடை ஆன்மிக நடை என்று சொல்கிறோம். (பலத்த கைதட்டல்). எழுத்து நடைமட்டுமல்ல, காசிநடைப் பயணம், திருச்செந்தூர் நடைப்பயணம், பழனி நடைப்பயணம், ஜோதிர்லிங்க நடைப் பயணம் என்றெல்லாம் அவர்

நடக்கிறார். இன்னொரு குறிப்பை நாம் கவனிக்க வேண்டும்; அருசோ அவர்கள் எந்தப் பட்டத்தையும் பாராட்டையும் ந ாடியதும் இல்லை; தேடிச் சென்றதும் இல்லை; எல்லாம் அவரைத் தேடித் தேடி வந்து சேர்ந்தன. மகாகவி "ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்" என்றான். நமது நகரத்தார் சமூகம் அன்ன சத்திரமும் அமைத்தது; அறிவுக் கோவிலும் திறந்தது. அதன் ஓர் அடையாளம்தான் அருசோவின் கோவில் பணியும் புத்தகப் பணியும்.

புத்தகத்தை வாசித்து வாசித்துச் சுவாசித்த சமூகம்தான் முன்னேறியிருக்கிறது. அதற்கு உலக அளவில் எத்தனையோ உதாரணங்கள் இருக்கின்றன. சீனத்து அறிஞர் பாஹியான் ஆயிரக் கணக்கான ஞானச்சுவடிகளை படகில் ஏற்றிக் கங்கையைக் கடந்து செல்லும்போது ஒரு சிக்கல் எழுந்தது. படகில் சுமை அதிகமாக இருக்கிறது என்றும், கொஞ்சம் சுவடிகளை ஆற்றில் தூக்கிப்போட்டுவிட்டால் ஆபத்து இல்லை என்றும் படகோட்டி சொன்னார். தேடித் தேடிச் சேகரித்த ஞானப்பனுவலை ஆற்றிலே வீசுவதா? திகைத்துப்போன பாஹியான் "நான் இறங்கி நீந்துகிறேன், சுவடிகளைப் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேருங்கள்" என்றார். ஓர் அறிவு ஜீவி, சிந்தனையாளன் மரணம் அடைகிறான் என்பதை சோவியத் அறிஞர் உலகம் ஒப்புக்கொள்வதில்லை. மார்க்ஸ் மரணம் அடைந்தபோதும், லெனின் மரணம் அடைந்த போதும் "அவர்கள் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்கள்" என்றுதான் அறிஞர் உலகம் அறிவித்தது. காரணம் என்ன? சிந்தனை, படிப்பது என்பது அந்த அளவுக்கு உயிர்ப்பு வாய்ந்தது. "நான் படித்து முடிக்க வேண்டும், உங்கள் அறுவைச் சிகிச்சையை ஒரு நாள் தள்ளி வையுங்கள்" என்றார் அறிஞர் அண்ணா. மரண தண்டனை வழங்கப்பட்டிருந்த மாவீரன் பகத்சிங், தூக்குத் தண்டனை வழங்க வந்த சிறை அதிகாரிகளிடம், தான் படித்துக்கொண்டிருந்த "மூலதனம்" நூலைக் காண்பித்து "நான் ஒரு சிந்தனையாளனுடன் பேசிக்கொண்டிருக்கிறேன் பொறுங்கள்" என்று உரைத்தான். அண்ணல் காந்தியடிகளை உருவாக்கியவை ஜான்ரஸ்கின், தோரோ, டால்ஸ்டாய் போன்றோர் படைத்த புத்தகங்கள்தானே! புத்தகங்கள் பற்றியும் அவற்றை உருவாக்கிய எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் பற்றியும் சிந்திக்கும்போது அந்த சிந்தனையாளர்களின் வாழ்க்கைத் துணைவியார் பற்றியும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். உலகளாவிய அளவில் நம்கண்முன்னே வருபவர் மார்க்சின் துணைவி ஜென்னிமார்க்ஸ்.

ஜென்னிமார்க்ஸ் வளமான குடும்பத்தைச் சார்ந்தவர்; அழகானவர். மார்க்ஸின் மனைவியாக வந்து அவர் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்காதவை; நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு மருந்து வாங்க முடியவில்லை; இறந்துபோன குழந்தையை நல்லமுறையில் அடக்கம் செய்ய வழியில்லை. இத்தனை துன்ப-துயரங்களைப் பட்டும் ஜென்னி அயரவில்லை; மார்க்ஸின் படைப்பாக்கங்களுக்குத் தொடர்ந்து உதவினார்; அந்தப் பணியைத் தவம்போல ஆற்றினார். அப்படி ஒரு இல்லறத் தவம் ஆற்றி நமது மதிப்பிற்குரிய திருமதி. நீலா அம்மையார் கவிஞர் அருசோ அவர்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள். அதன் விளைவுதான் இந்த நூறு புத்தகங்களும்! நமது கவிஞர் தொகுத்தும் உரைவகுத்தும் வெளியிட்டுள்ள "கந்தபுராணம்" பிற நூல்களிலிருந்து மிகவும் வித்தியாசமானது! மற்ற காவியங்களில், மற்ற புராணங்களில் தீயனவும் பகைமையும் அழிக்கப்படும்! ஆனால் கந்தபுராணத்தில் மட்டும்தான் பகைமை அழிக்கப்படாமல், நட்பாக மடைமாற்றம் செய்யப்படுகிறது! ஆணவம்தான் அழிக்கப்படவேண்டும்; ஆணவம் கொண்டிருந்த ஆள் அழிக்கப்பட வேண்டியவன் அல்ல ;

நால்வர் செய்த நற்றமிழ் வழியில் நமது கவிஞர் பயணம் செய்து வந்துள்ளார். மொழியால் ஒருவர் வீடுபேறு அடையமுடியும் என்ற தமிழ் ஆன்மிக வரலாற்றில் கவிஞர் பயணம் செய்து வந்துள்ளார். புத்தகங்கள் சமுதாயத்தில் மிகப்பெரிய மாற்றங்களைச் செய்யும் என்ற நம்பிக்கையில் பயணம் செய்து வந்துள்ளார். புத்தகங்களை நாம் புரட்டுகிறோமோ இல்லையோ, நல்ல புத்தகங்கள் உலகத்தைப் புரட்டிப்போட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நமக்கும், உலகத்தார்க்கும் சொல்லும் வகையில் பயணம் செய்து வந்துள்ளார். உலகம் நம்மை விட்டு விலகினாலும், உற்றார் நம்மை விட்டு விலகினாலும், உறவுகள் நம்மை விட்டு விலகினாலும் நம்மைவிட்டு விலகாத ஒரே உறவு புத்தகங்கள்தான் என்பதை உலக வரலாறும் அனுபவங்களும் உணர்த்திக்கொண்டிருக்கின்றன.

அத்தகைய பொன்றாத் துணையாக நூறு புத்தகங்களைத் தமிழ்ச் சமுதாயத்துக்கு, தமிழ் இளைஞர்களுக்கு ஆன்மிகத் தமிழில் வழங்கிய கவிஞரை வாழ்த்துகிறோம்! இன்னும் நூறாண்டு வாழ்ந்து பல்லாற்றானும் தமிழ்த்தொண்டுபுரிய சண்முகநாதப் பெருமானைப் பிரார்த்திக்கிறோம்!

உரைச்சுருக்கம் : நமது நிருபர் "மூமு" தேவகோட்டை.

குன்றக்குடியில் 14.6.2008இல் நடைபெற்ற உலகத் திருக்குறள் பேரவை பொதுக்குழுக் கூட்டம்

தீர்மானம் 7 :

1. இல்லந்தோறும் திருக்குறள் என்ற நோக்கில் மாணவர்களுக்கு இலவசமாக உரையுடன் கூடிய திருக்குறள் நூலினை ஆண்டு தோறும் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கிட வகை செய்தல் வேண்டும்.
2. தேசிய நூலாகத் திருக்குறளை அறிவித்திட வேண்டும்.

– அனைத்துலக வளர்தமிழ் ஆய்வு மாநாடு
புதுடெல்லி

– மோ. அன்பழகன், தூத்துக்குடி.

தீர்மானம் 8 :

1. நாளிதழ் – வார, மாத இதழ்கள், தொலைக்காட்சிகள் குறளும் பொருளும் கூற வேண்டும்.
2. கலைஞரின் குறள் நெறி விளக்கம் மதுரையில் உள்ளது போல ஊர்தோறும் செய்ய வேண்டும்.
3. குறள் நெறி – இதழினை (இலக்குவனார் விட்ட பணி) தொடர வேண்டும்.
4. மாதந்தோறும் அல்லது ஆண்டுதோறும் திருக்குறள் பணி செய்வோரையும் புரவலர்களையும் பாராட்ட வேண்டும்.

– புலவர் தவ. மாணிக்கம், மதுரை

தீர்மானம் 9 :

1. தமிழ்நாட்டின் கல்வி நிலையங்களில் பயிலும் அனைத்து 6–ஆம் வகுப்பு, மாணவ, மாணவிகளுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்குவதோடு, உரையுன் கூடிய திருக்குறள் நூலையும் இலவசமாக வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு உலகத் திருக்குறள் பேரவை வேண்டுகோள் வைக்கிறது.

– பழ. மாறவர்மன்
செயலாளர், உலகத் திருக்குறள் பேரவை, தஞ்சை.
அனைத்துலக வளர்தமிழ் ஆய்வு மாநாடு, புதுதில்லி.

தீர்மானம் 10 :

1. ஆரம்பப் பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்கி, ஆணையிட்ட தமிழக அரசுக்கும், அதனை உறுதிப்படுத்தித் தீர்ப்பு வழங்கி இருக்கின்ற உயர்நீதிமன்றத்திற்கும் நமது பேரவை நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.

2. பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையைத் திறக்க ஆவன செய்யுமாறு நடுவண் அரசினையும், தமிழக மற்றும் கர்நாடக அரசுகளையும் திருக்குறள் பேரவை கேட்டுக் கொள்கிறது. இது தொடர்பாக அஞ்சல் அட்டைகளை ஆளுநருக்கும், குடியரசுத் தலைவருக்கும் எழுதியவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. தொடர்ந்து தமிழக முதல்வர், கர்நாடக ஆளுநர், பாரத குடியரசுத் தலைவர் ஆகியோருக்கு அஞ்சலட்டை எழுதவேண்டுமென திருக்குறள் பேரவை பொதுமக்களை வேண்டிக்கொள்கிறது.

3. ஆண்டுதோறும் வெளிவரும் திருக்குறள் தொடர்பான நூல்களுள் மிகச் சிறந்த நூலினைத் தெரிவு செய்து, தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெயரில் பாராட்டிதழ் வழங்கி ஊக்குவித்தல் மற்றும் திருக்குறள் தொடர்பான தகுதியான நூல்கள் வெளிவர உறுதுணை செய்தல் என முடிவு செய்யப்பெறுகிறது.

4. ஏற்கெனவே, நமது பேரவை முடிவு செய்த வண்ணம், மாநிலமெங்கும், உலகத் திருக்குறள் பேரவையின் மகளிர் அணி, இளைஞர் அணி ஆகியவற்றை உருவாக்கிச் செயல்படுத்துவதில் தீவிரம் செலுத்த, அனைத்து மாவட்டக் கிளையினரையும் வேண்டிக் கொள்கிறது.

5. அரசுப் பணித் தேர்வுக்குரிய நிலையில், ஆய்வுக் கட்டுரைகளுக்கு 5 மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது. அந்த வரிசையில் நமது திருக்குறள் பேரவை ஆய்வு நூல்களையும் சேர்த்து, அதில் எழுதி வரும் ஆய்வாளர்களுக்கும் மதிப்பெண் வழங்கத் தமிழக அரசினை இப்பேரவை வேண்டிக் கொள்கிறது.

– உலகத் திருக்குறள் பேரவை,
புதுக்கோட்டை

தீர்மானம் 11 :

திருவள்ளுவர் பிறந்தது குமரி மண் என்பது பல்வேறு ஆய்வரங்குகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருமுருக கிருபானந்த வாரியார் போன்ற தமிழ்ப் பேரறிஞர்கள் பலரும் இக்கருத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். அந்த ஆய்வு நூல் வடிவம் பெற்று பேராசிரியர் அன்பழகனார் அணிந்துரையுடன் டாக்டர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள கன்னியாகுமரி விவரச் சுவடியிலும் இந்த உண்மை இடம் பெற்றுள்ளது. இது பாடப் புத்தகங்களில் இடம் பெற முயற்சி செய்வதென்று தீர்மானிக்கப்பெற்றது.

– உலகத் திருக்குறள் பேரவை,
குன்றக்குடி.

தீர்மானம் 12 :

1. திருவள்ளுவர் விருதினைத் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசிற்கும் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.
2. சென்னையில் "செம்மொழி உயர் ஆய்வு மையம்" அமைய நடுவணரசு ரூ. 76.32 கோடி ஒதுக்கீடு செய்து அதன் தலைவராகக் கலைஞர் அவர்களை நியமனம் செய்த மத்திய அரசிற்குப் பாராட்டும் நன்றியும் பொதுக்குழு தெரிவித்துக் கொள்கிறது.
3. திருக்குறளைத் தேசிய நூலாகவும், தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழியாகவும் அறிவிக்க வேண்டும் எனப் பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
4. திருக்குறள் நெறி பரவத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் மாவட்டந்தோறும் மாவட்ட உலகத் திருக்குறள் பேரவையின் சார்பில் திருக்குறள் கூட்டம் நடத்த வேண்டும் என்று இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

– மோ. அன்பழகன், தூத்துக்குடி
அனைத்துலக வளர்தமிழ் ஆய்வு மாநாடு, புதுதில்லி,
– சு. சுந்திரா, மதுரை

தீர்மானம் 13 :

1. தமிழக அரசின் திருவள்ளுவர் விருது பெற்ற தவத்திரு பொன்னம்பல அடிகளார் (தலைவர், உலகத் திருக்குறள் பேரவை) அவர்களுக்குப் பேரவையின் சார்பில் பாராட்டு விழா நடத்துவதென்று தீர்மானிக்கிறது.
2. செம்மொழி ஆய்வுத் திட்டத்தின் கீழ் உலகத் திருக்குறள் பேரவை ஆங்கில வழிப் பள்ளி ஆசிரியர்கள் 9,11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு குறள் பயிலரங்கினை 21 நாட்கள் நடத்துதல் என்ற திட்ட வரைவினை அனுப்புவதென்று தீர்மானிக்கப்பெற்றது.
3. வீதிகள் தோறும் குறளைப் பொருளுடன் பலகைகளை வைத்துள்ள தமிழக அரசின் செயலுக்கு இப்பொதுக்குழு பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறது.

– சு. சந்திரா, மதுரை

தீர்மானம் 14 :

1. உலகத் திருக்குறள் பேரவையின் செயல்பாடுகளை அறிந்து கொள்வதற்கும் மற்றும் ஆய்வுகளைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதற்கும் "வள்ளுவம்" என்று செய்தி வெளியீடு ஒன்று உலகத் திருக்குறள் பேரவை சார்பான வெளியிடுவதென்று தீர்மானிக்கப்பெற்றது.
2. எல்லாக் கிளைகளின் தலைவர், செயலர், பொருளர் மற்றும் உறுப்பினர் பட்டியல் அடங்கிய நூல் ஒன்று ஆண்டுதோறும் வெளியிடுவதென்று தீர்மானிக்கப்பெற்றது.
3. 1330 திருக்குறளையும் மனனம் செய்து இருக்கின்ற மாணவர்களுக்குப் பாராட்டுச் செய்வதென்று தீர்மானிக்கப்பெற்றது.

– பழ். மாறவர்மன்
உலகத் திருக்குறள் பேரவை, தஞ்சாவூர்.

தீர்மானம் 15 :

மனித வள மேம்பாடு மற்றும் மைசூர் செம்மொழி உயராய்வு மையம் ஆகியவற்றின் நிதி ஆதாரங்களைப் பெற்று திருக்குறள் ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளும் பணிக்காகப் பின்வருவோரைக் கொண்ட குழு அமைப்பதெனத் தீர்மானிக்கப்பெறுகிறது.

தலைவர் : முனைவர். இரா. மோகன்
செயலர் : பேராசிரியை முனைவர் மு. குருவம்மாள்

உறுப்பினர்கள் :
1. முனைவர் சு. சந்திரா
2. முனைவர் சொ. சேதுபதி
3. முனைவர் மு. பழனியப்பன்

– உலகத் திருக்குறள் பேரவை
குன்றக்குடி

தீர்மானம் 16 :

திருவள்ளுவர் போற்றிய "உழவுத் தொழில்" இன்றைய நிலையில் தாழ்வுற்று வருகிறது. இதை மேம்படுத்த அரசு தனிக் கவனம் கொள்ளுதல் வேண்டும். தற்போது, உழவர்களின் கோரிக்கையை ஏற்று நெல்லின் விலையைக் கூடுதலாக்கிய தமிழக அரசின் நடவடிக்கையை நாட்டின் நலம் கருதும் உலகத் திருக்குறள் பேரவைப் பொதுக்குழு பாராட்டி மகிழ்கிறது.

– புலவர் க. சண்முகம்,
மதுரை

தீர்மானம் 17 :

திருக்குறள் வகுப்புகள் நடத்த மாலை நேர வகுப்புகள், வார விடுமுறை நாட்களில் குறுகிய காலப்பயிற்சி, குறள் இசைப் பயிற்சி தமிழக முழுவதும் மண்டல வாரியாக நூற்றுக்கணக்கான குறள் பயிற்சிப் பட்டறைகளை ஆங்காங்கே கல்வி நிலையங்களுடன் இணைத்து நடத்தலாம் எனத் தீர்மானிக்கப்பெற்றது.

– மு. குருவம்மாள் திண்டுக்கல்

தீர்மானம் 18 :

1. தமிழக அரசு ஆண்டுதோறும் மனித நேயத்திற்காக அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெயரில் விருது வழங்க வேண்டுமெனத் தமிழக அரசை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.
2. கோவை ஆர்.எஸ். புரம் மாநகராட்சிக் கலையரங்கத்திற்குத் திருவள்ளுவர் பெயர் சூட்டிடக் கோவை மாநகர் மாமன்றம் சார்பில் தமிழக அரசுக்கு இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

– இரா. தம்பிதுரை
இ. சிவசெந்தில், கோவை மாவட்டம்.

தீர்மானம் 19 :

உலகத் திருக்குறள் பேரவை உறுப்பினர்கள் அன்பர்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம் மற்றும் மங்கல நிகழ்வுகளில் திருக்குறள் முற்றோதல் செய்வித்து திருக்குறள் நெறி பரப்ப வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்பெறுகிறது.

– இராம. அருணகிரி,
சிங்கம்புணரி.

தீர்மானம் 20:

உலகத் திருக்குறள் பேரவையின் அடுத்த மாநில மாநாட்டை தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்களின் விருப்பத்திற்கிணங்க வேலூர் மாவட்டம் இரத்தினகிரியில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பெற்றது.

– உலகத் திருக்குறள் பேரவை, குன்றக்குடி

தீர்மானம் 21:

1. தமிழ்நாட்டுத் தேர்வாணையம், தமிழ்நாட்டு ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாட்டுக் காவலர் தேர்வு வாரியம் முதலிய தமிழக அரசு, அரசுசார் வாரியங்கள் அனைத்திற்கும் நடத்தப்பெறும் பணியாளர் தேர்வுகள் அனைத்தும் தமிழில் மட்டுமே நடத்தப்பெற வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.
2. தமிழ்நாட்டு அரசுப் பணியாளர்கள், அரசுசார் நிறுவனப் பணியாளர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பெறும் போது தமிழ் இலக்கியம் படித்தோர்க்கும் தமிழ் வழியில் படித்தோர்க்கும் முன்னுரிமை தரவேண்டும் எனத் தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.
3. தமிழ் ஆட்சி மொழிச் சட்ட அரசாணைகளைச் செயற்படுத்த முற்றதிகாரம் உடைய தமிழ் ஆட்சிமொழி ஆணையம் ஒன்றை அமைக்க வேண்டும் எனவும், தமிழ் ஆட்சி மொழிச் சட்ட அரசாணைகளைச் செயற்படுத்தாத அரசு அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகளைத் தமிழ் ஆட்சி மொழி ஆணையம் வழியாக எடுக்க வேண்டும் என்று உலகத் திருக்குறள் பேரவை வலியுறுத்துகிறது.
4. சமச்சீர் கல்வி முறையைத் தமிழகப் பள்ளிகளில் நடைமுறைப் படுத்த விரைவான நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென உலகத் திருக்குறள் பேரவை வலியுறுத்துகிறது.

– கு. திருமாறன், திருச்சிராப்பள்ளி.

அருளாலய நூற்றாண்டு

(தமிழாகரர். **தெ. முருகசாமி,** புதுச்சேரி)

அருளா லயத்தின் நூற்றாண் டென்றதும்
இருளார் உலகம் விடிந்தும் விடியா
வெளிச்சம் பெற்ற வியப்புத் தானும்
சுளிப்புடன் களிப்பாய்ப் பலர்க்குத் தோன்ற;
ஒன்றை உரைப்பன்! உயர்புகழ் அண்ணா
அன்றைக் குத்தான் பிறக்கா திருந்தால்
இன்றைக் கிங்கே நூற்றாண் டேது?
அன்றைக் கவர்போல் பிறந்தோர்க் கெல்லாம்
நூற்றாண் டாயினும் எவர்க்குத் தெரியும்!
காற்றில் கரைந்த கற்பூ ரம்போல்
காணாததாலே அண்ணா ஒருவரே
மாணாச் சிறப்பை மதிப்புடன் பெற்றார்!
அத்தி பூத்த அதிசயப் பூவாய்
இத்தரை தன்னில் சித்திரை நிலவாய்
அண்ணா என்ற அருமைப் பெயரைத்
தண்ணார் உலகில் எவரே பெற்றார்?
உடன்பிறப் பான உத்தமப் பெயரது!
கடமை கண்ணியம் கட்டுப் பாட்டைக்
கற்றுக் கொடுத்த ஆசான் என்பதால்
முற்றும் அவரே அண்ணல் தகுதியை
முழுவதும் பெற்ற முதல்தமிழ் அறிஞராய்
விழுப்புகழ் பெற்றார்! வீறுகொள் அறிஞர்
பட்டந் தன்னைப் பார்புகழ் கல்கி
இட்டுபா ராட்ட ஏற்றங் கொண்டார்!
அண்ணா சமூக அழுக்கைப் போக்கும்
வண்ணான் என்றார் வளர்திரு வி.க!
பெரியார் பண்ணையில் நாற்றங் காலாய்
சரியாய் வளர்ந்ததும் அரசியல் நிலத்தில்
பிடுங்கிநடப் பட்டார்! பெருவிளைச்ச லானார்!
ஒடுங்கிக் கிடந்த சமுதா யத்தைப்
பேச்சால் எழுத்தால் பிறங்கச் செய்தார்!
ஏச்சால் வந்த இடர்களை எல்லாம்
எதையும் தாங்கும் இதயத் தாலே
உதைபந் தாகத் தாங்கிச் சுமந்ததால்

தமிழகம் தாங்கும் முதலமைச் சானார்!
அமிழ்தாய் அவரும் ஆண்டிடும் போது
தாய்மக ளுக்குக் கட்டிய தாலியாய்த்
தாரணி வியக்கத் திரைப்படக் கதையை
எழுதிய புரட்சிபோல் ஒன்றைச் செய்தார்!
விழுமிய தாய்தான் தான்பெற் றிட்ட
மகவிற் குப்பெயர் மகிழ்வுடன் வைப்பது
தகவுறு வழக்கம்! அதனைத் தகர்த்துத்
தனையீன் றிட்ட தாய்நாட் டிற்கு,
அனைவரும் புகழத் தமிழ்நா டென்ற
தனிப்பெரும் பெயரை வைத்தா ரென்பது
தனையன் தாய்க்குப் பெயர்வைத் திட்ட
புதுமை யன்றோ! அதனால் அவர்புகழ்
மதுவிரி மலரின் மணம்போல் வழிவழி
தமிழுள் ளளவும் தமிழருள் ளளவும்
இமிழ்கடல் உலகில் நிலைக்கும் என்பேன்!
அவர்தம் வாழ்வில் வனப்புகள் பலஉள!
அவற்றுள் ஒன்றே அற்புதம்! அற்புதம்!
மனித நேயர் அண்ணா என்பதாம்!
புனித போப்பை வாடிகன் நகரில்
பார்த்த போது போர்ச்சுகல் சிறையில்
ஆர்த்து, அடங்கிக் கிடந்த இரானடே
போரா ளியைத்தான் விடுதலை செய்ய
ஆரா விருப்பாய்க் கேட்டு, விடுதலை
வாங்கித் தந்த வித்தகச் செயல்போல்
ஈங்கிவ் வுலகில் எவரே செய்தார்?
என்றே நெஞ்சம் நினைக்கும் வேளை
ஒன்றா இரண்டா அவர்உன் னதங்கள்?
"அண்ணா என்றால் அண்ணாதான் மற்ற
அண்ணா எல்லாம் சும்மாதான்" என்ற
வாழ்த்தொலி கேட்ட வாஞ்சையால் தலையைத்
தாழ்த்தித் தரையில் உறங்கிய போது;
"அகர எழுத்துபோல் அண்ணா தானும்
சிகரந் தொட்ட சாதனை யாளர்!
அரசியல் என்னும் அற்புத வானில்
உரசல் இன்றி ஒவ்வொரு கிரகமும்
ஓடும் முறைபோல் நன்றாக ரிகத்தால்
நாடும் ஏடும் நாளும் வாழ்த்த
வாழ்ந்தமா மேதை! வாழ்ந்த நாளில்

தாழ்ந்த தமிழகம் தலைநிமிர்ந் ததுவே!
ஆன்ற அவரின் அரசியல் சால்பைச்
சான்று காட்டிக் கூற வேண்டின்,
சிலப்பதி காரம் காட்டும் மூன்று
நிலப்புகழ் சேர சோழ பாண்டியர்
என்போர்க் கிருந்த ஒத்த பெருமை
அன்று சேரன் வடவ்ரை வென்றதும்
மூவரில் தானே முன்னவன் என்றதால்
பாகற் காயாய்க் கசந்தது ஒற்றுமை!
என்பதை இளங்கோ காட்டிய ஒன்றை
மன்பதை தன்னில் மாற்றிக் காட்ட
முனைந்த அண்ணா முன்னெதிர்த் தோரை
முனைப்புடன் சேர்ந்தார்! ஓர்கூட் டணியாய்!
நின்றார் தேர்தலில்! நிலைத்தது வெற்றி!
வென்ற வெற்றிக் கனியை அண்ணா
அரிய நெல்லிக் கனியை அதியமான்
பெரிய அவ்வைக் களித்தது போலப்
பெரியார் தனக்குக் காணிக்கை ஆக்கிய
விரிதமிழ் மாணிக்கச் செம்மலாய் மலர்ந்தார்!
இந்திப் போராட் டத்தின் போது
தந்த நமது கட்டண ஒறுப்பை
முதல்வ ரானதும் திருப்பி யனுப்பிய
உதவிதான் என்னே! இதுபோல் மதுரை
ஆலை அரசர் தியாக ராசரின்
ஓலை பெற்ற இந்தி வழக்கெலாம்
தளர்த்தித் தமிழைத் துளிர்க்கச் செய்த
உளத்தைத் தானும் என்னென் போம்நாம்!
ஆதலால் அண்ணா நூற்றாண் டைத்தான்
காதலால் அனைவரும் ஆண்டெலாம் காண
வேண்டும் என்ற வெடிப்புச் செய்தியைத்
தூண்டும் உளியின் ஓசையாய்க் கேட்டதால்,
யாரெனப் பார்த்தேன்! தவத்திரு அடிகளார்
மார்வரை நீண்ட மன்னுபுகழ் தாடியை
நீவிய வாறு ஓவிய மாகி
"காவிய நாயகன் காஞ்சித் தலைவனின்
அருட்பண் பெல்லாம் அருளா லயத்தின்
பொருட்பண் பென்பதால் பொலிக அவரின்
நூற்றாண் டென்று" போதித் திட்ட
ஏற்றொலி கேட்டே எழுந்தேன் நன்றே!

உலகத் திருக்குறள் பேரவைச் செய்திகள்

புதுக்கோட்டை மாவட்டக் கிளைச் செய்தி

24.06.2008 அன்று மாலை 6.30 மணிக்கு இராதா கபே மாடியில் மீனாட்சி மகாலில் திரு. சண்முக. பழனியப்பன் தலைமையில், புலவர். நா. இராமச்சந்திரன் முன்னிலையில் பொதுக்குழுக் கூட்டம் கூடியது. புலவர் மா. நாகூர்மொழி வாழ்த்துப்பாட கூட்டம் தொடங்கியது. பொதுச் செயலாளர் தி.சு. மலையப்பன் வரவேற்புரை ஆற்றினார். தலைவர் திரு. சண்முக. பழனியப்பன் அவர்கள் உலகத் திருக்குறள் பேரவை மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஊட்டியுள்ளது. இதுபோலத் தொடர்ந்து பணியாற்ற அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டினார்.

வரவு, செலவு அறிக்கை ஏற்கப்பெற்றது. வரவேண்டிய நிலுவைத் தொகைகளைக் கடிதம் வாயிலாகப் பெற முடிவு செய்யப் பெற்றது.

மே திங்களில் அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற திருவாளர்கள் மு. இராமுக்கண்ணு, புலவர். மு. பாலசுப்பிரமணியன், புலவர். ச.தோ. தமிழ்மாறன், புலவர். பா. பூங்கோதை ஆகியோரின் பணி நிறைவிற்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பெற்றது. புலவர் நா. இராமச்சந்திரன் அனைவரையும் பாராட்டினார்.

14.6.2008 அன்று குன்றக்குடியில் நடைபெற்ற தலைமைக் கழகப்பொதுக்குழு முடிவுகள் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பெற்றது.

மாதம்தோறும் நடைபெறும் கூட்டங்களை, மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை மாலை 6.30 மணிக்குத் தெற்கு நான்காம் வீதியில் உள்ள டி.என்.பி.இ.டி. பள்ளிக் கட்டிடத்தில் நடத்துவது என முடிவு செய்யப்பெற்றது. அக்கூட்டத்தில் அறிமுகப் பேச்சாளராக பதினைந்து நிமிடங்கள் ஏதாவது ஒரு பள்ளி மாணவ மாணவியரைப் பேசவைப்பது என்று இரண்டு தலைப்புகளுக்கு மேற்படாதவாறு கூட்டத்தை அமைப்பது என்றும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குறைந்த செலவில் வெளியில் இருந்து ஒருவரைப் பேச அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சூன் மாதம் புலவர் மு.பா, சூலை மாதம் புலவர் தி.சு.மலையப்பன், ஆகஸ்டு மாதம் சண்முக. பழனியப்பன், செப்டம்பர் மாதம் புலவர் நா. இராமச்சந்திரன், அக்டோபர் மாதம் முருகபாரதி நவம்பர் மாதம் சுப. இரர்தாபாய் மற்றும் நாகலெட்சுமி, டிசம்பர் மாதம் சந்திரா ரவீந்திரன் மற்றும் சங்கமித்ரா, ஜனவரி மாதம் மெ. இராமச்சந்திரன் செட்டியார் ஆகியோர் கூட்டங்களை நடத்த முன்வந்தனர்.

கல்வி நிலையங்களில் இலக்கிய மன்றம் இருப்பதைப் போல மாணவர்க்கான திருக்குறள் பேரவை அமைத்து மாணவர்களைப் பங்குபெறச் செய்யலாம் என்றும் மாணவர்களுக்கு உறுப்பினர் கட்டணத்தில் சலுகை வழங்கலாம் என்ற திரு. அ. வேதையன் கருத்து ஒருமனதாக ஏற்கப்பெற்றது.

காதணி விழா, திருமணம் போன்ற நிகழ்வுகளில் வெற்றிலைப் பையோடு திருக்குறள் புத்தகத்தையும் வழங்கலாம் என்ற திரு. இராமுகண்ணுவின் யோசனை ஏற்கப்பெற்றது.

வணிகர்களை அணுகிப் பொருள்களைக் கட்டும் பைகளில் (Carry bag) திருக்குறளை இடம்பெறச் செய்வது என்ற திரு. நிலவை. பழனியப்பன் கருத்து ஒருமனதாக ஏற்கப்பெற்றது.

கடிதத்தாள்கள், முகவரி அட்டைகள் போன்றவற்றை அச்சிடுகையில் ஒரு திருக்குறளை இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற கவிஞர். வீ.கே. கஸ்தூரிநாதன் கருத்து ஏற்கப்பெற்றது.

பேரவையின் களப்பணியாளர்களாக திருவாளர்கள் கவிஞர். வீ.கே. கஸ்நாதன், சுப. இராதாபாய், இரா. நாகலெட்சுமி ஆகியோர் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பெற்றனர்.

கணக்கு ஆய்வர்களாக திரு. எஸ். சிவாஜி, திரு.கி. ஜெயராமன் ஆகியோர் தேர்வு செய்யப்பெற்றனர்.

பேரவையின் பொறுப்பாளர்களாக ஒருமனதாக தேர்வு பெற்றவர்கள்: திருவாளர்கள் சண்முக. பழனியப்பன் தலைவராகவும், புலவர். தி.சு. மலையப்பன் பொதுச்செயலாளராகவும், மெ. இராமச்சந்திரன் செட்டியார் பொருளாளராகவும், ஹா.ஜி. சபியூதீன், புலவர். நா. ராமச்சந்திரன், மருத்துவர் மதுராந்தகி கலியமூர்த்தி, புலவர். மு. பாலசுப்பிரமணியன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், பேரா. மு. பழனியப்பன், இளைஞரணிச் செயலாளராகவும், சந்திரா ரவீந்திரன் மகளிரணி செயலாளராகவும், வே. நாராயணசாமி, புலவர். ச.தோ. தமிழ்மாறன், மகா. சுந்தர், சங்கமித்ரா தனபதி ஆகியோர் துணைச் செயலாளர்களாகவும் மு. இராமுக்கண்ணு, லியாகத் அலி, தங்கம் மூர்த்தி, தனபால் செட்டியார், வழக்கறிஞர் பழனிச்சாமி, சிலட்டூர் இராமலிங்கம், அ. வேதையன், ப. முத்துப்பாண்டியன், புலவர். மா.நாகூர், சிவகுருநாதன், பாலஸ்ரீ ஹரிமோகன், முருகபாரதி, நிலவை. பழனியப்பன், வளர்மதி புகழேந்தி, கிருஷ்ணவேணி, வே. சுகுமார், சண்முகவல்லி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்வு பெற்றனர்.

திருவாளர்கள் பேரா. மு. பழனியப்பன், திருமதி. சந்திரா ரவீந்திரன், புலவர். மகா.சுந்தர், சங்கமித்ரா தனபதி, கவிஞர். வீ.கே. கஸ்தூரிநாதன், கவிஞர். சுப. இராதாபாய், கவிஞர். நாகலெட்சுமி, அ.வேதையன், முருகபாரதி ஆகியோர் கலந்து பள்ளிகளில் திருக்குறளைப் பரப்பும் முயற்சிகளில் ஈடுபடுவது என முடிவு செய்யப் பெற்றது.

திருக்குறள் பாடல்களை ஒலி நாடாவாக உருவாக்கும் முயற்சிகளில் திருவாளர்கள் ஹரிமோகன், வளர்மதி புகழேந்தி, புலவர். ச.தோ. தமிழ்மாறன் ஆகியோர் ஈடுபடுவதென்றும், நிகழ்ச்சிகளை திருக்குறள் இசையாக ஒலிபரப்ப முயற்சிகள் மேற்கொள்வது எனவும் முடிவு எடுக்கப்பெற்றது.

மாதக் கூட்டங்களை திருவாளர்கள் பேரா. மு. பழனியப்பன், புலவர். மகா.சுந்தர், முருகபாரதி, சந்திரா ரவீந்திரன், புலவர். மா.நாகூர், சங்கமித்ரா, கிருஷ்ணவேணி ஆகியோர் இணைந்து நடத்துவது என முடிவு எடுக்கப்பெற்றது.

கூட்ட அறிவிப்பை அறிவிக்கும் பொறுப்பு திருமதி. சங்கமித்ரா, புலவர் மகா.சுந்தர் செய்வது எனவும், இந்நிகழ்வுக்கான உள்ளூர்த் தொலைக்காட்சித் தொடர்பை திரு. முருகபாரதி கவனித்துக் கொள்ளவும் முடிவு செய்யப்பெற்றது.

திரு. சண்முகபாண்டியன், திரு.மு. இராமுக்கண்ணு, திருமதி. நாகலெட்சுமி ஆகியோர் புதிய உறுப்பினர்களாக திருவாளர்கள் ஆர்.கல்யாணசுந்தரம், அரு. பொன்னழகு, மருத்துவர் இராமமூர்த்தி, டி. முரளீதரன், கருப்பையா ஆகியோரைச் சேர்த்தமைக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பெற்றது.

குன்றக்குடியில் நடைபெற்ற தலைமைப் பொதுக்குழுவில் புதுக்கோட்டை கிளை உலகத் திருக்குறள் பேரவையின் புரவலராக விளங்கும் திரு. சீனு சின்னப்பா அவர்கள் தலைமைக் கழகப் பொருளாளராகத் தேர்வு செய்யப்பெற்றதற்கும், முனைவர். மு. பழனியப்பன் மனிதவள மேம்பாடு உயர்வு ஆய்வு மையத் திட்டத்துடன் இணைந்து பணியாற்றும் குழுவில் இடம்பெற்றதற்கும் இக்குழு பாராட்டும், நன்றியும் தெரிவித்தது. பாராட்டுக் கூட்டம் ஜூலைத் திங்களில் நிகழ்த்த முடிவு செய்யப்பட்டது.

உலகத் திருக்குறள் பேரவை சார்பில் நாள்தோறும் ஒரு திருக்குறளைப் பொருளோடு எழுதிக் கரும்பலகையில் வைத்திடும் பொறுப்பை திருவாளர்கள் ப. முத்துப்பாண்டியன் ஹரிமோகன்,

முருகபாரதி, சந்திரா ரவீந்திரன், புலவர். இராமச்சந்திரன் ஆகியோர் கொண்ட குழு ஏற்பதென முடிவு செய்யப்பட்டது.

மழலை முதல் நடுநிலைப் பள்ளிகளில் திருக்குறள் பொது நிகழ்வுகள் நடத்த முடிவு செய்யப்படுகிறது. பொது அறிவுச் சோதனை, குறள் ஒப்புவித்தல், கதை கூறுதல், நாடகம் ஆகியன நிகழ்த்த முடிவு செய்யப்படுகிறது. இதற்கான முயற்சிகளை களப்பணியாளர்களும், இளைஞர், மகளிர் அணியினரும், திருவாளர்கள் மதுராந்தகி கலியமூர்த்தி, மு. பழனியப்பன், சந்திரா ரவீந்திரன், கஸ்தூரிநாதன், ராதாபாய், சிவகுருநாதன், நாகூர், ஹரிமோகன், முருகபாரதி, புகழேந்தி, வளர்மதி புகழேந்தி, தங்கம் மூர்த்தி, ராமுக்கண்ணு ஆகியோர் குறிப்பாகக் கூடி இதற்கான திட்டமிட்டு செயல்படுதல் என முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருப்பதைப் போல புதுக்கோட்டை நகர்மன்றத்திலும் பேருந்து நிலையத்திலும் திருக்குறள் கொண்ட பலகைகளைப் பதிக்க புதுக்கேட்டை நகராட்சியை இக்குழு வேண்டிக்கொள்கிறது.

பெங்களூரில் திறக்கப்பெறாமல் உள்ள திருவள்ளுவர் சிலையைத் திறக்கக்கோரி கோரிக்கை அஞ்சல் அட்டைகளை குடியரசு தலைவர், தமிழக ஆளுநர், முதல்வர், கர்நாடக ஆளுநர், முதல்வர் ஆகியோருக்கு எழுதுவதென இக்குழு முடிவு செய்கிறது.

வரும் திருவள்ளுவர் திருநாளில் மாதநாட்காட்டி ஒன்று அச்சிட்டு வெளியிடுவது என்றும் இது குறித்துத் தக்கார் ஒருவரை அணுகுவது என்றும் முடிவு செய்யப்பெற்றது.

அனைத்து உறுப்பினர் முகவரிப்பட்டியல் ஒன்று வெளியிடுவது என முடிவு எடுக்கப்பெற்றது.

உலகத் திருக்குறள் பேரவை சார்பில் இரத்தினகிரியில் நடைபெறவுள்ள மாநில மாநாட்டிற்கு அவரவரால் ஆனமுழு ஒத்துழைப்பையும் வழங்குவதென முடிவெடுக்கப்பெற்றது.

ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் தொடர்பு கொள்ள எழும் உறுப்பினர் பட்டியலை பொதுச்செயலாளருக்கு அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு திங்கள் கூட்டம் முடிந்தவுடன் குறைந்தது அரை மணி நேரம் ஒன்று கூடி அடுத்த திட்டம் வகுப்பது என முடிவு செய்யப்பட்டது.

பேரா. மு. பழனியப்பன் அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுபெற்றது.

தூத்துக்குடியில் "உலகப் பொதுமறை" திருக்குறள் பலகைத் திறப்பு விழா!

தூத்துக்குடி செப்டம்பர் 3, தூத்துக்குடியில் உலகத் திருக்குறள் பேரவையின் தூத்துக்குடிக் கிளையின் சார்பில் "உலகப் பொதுமறை" திருக்குறள் பலகைத் திறப்பு விழா 02.09.2008 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் புதிய பேருந்து நிலையத்தில் திரு.அரு.அ.சி. தனபாலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வணக்கத்திற்குரிய மாநகர் மேயர் திருமதி. இரா. கசுத்தூரித் தங்கம் அவர்கள் முன்னிலை வகித்தார்.

உலகத் திருக்குறள் பேரவையின் துணைப் பொதுச் செயலர் திரு. மோ.அன்பழகன் வரவேற்றுப் பேசினார்.

முதற் திருக்குறள் பலகையை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதாசீவன் அவர்கள் திறந்து உரையாற்றினார்கள்.

இரண்டாவது பலகையைத் தூய இஞ்ஞாசியர் பள்ளி முன்பும், மூன்றாவது பலகையை சிவன் கோவில் முன்பும் தூத்துக்குடி மாநகர் மேயர் இரா. கசுத்தூரித் தங்கம் திறந்து வைத்தார். கால்டுவெல் பள்ளி முன்பு நான்காவது பலகையை மாநகர் துணை மேயர் திரு. தொம்மை சேசுவடியான் திறந்து வைத்தார்.

பொறியாளர் சி. அம்புரோசு நன்றி கூறினார். விழாவில் ஆ. திருச்சிற்றம்பலம், சைவ நெறி காந்தி, கு. சீனிவாச சித்தர் க. சதா, இராசாமணி, தர்மராசு, ஈசுவரன், நகர மன்ற உறுப்பினர்கள் கனகராசு, சாமி மற்றும் பாவலர்கள் மலர்வேந்தன், பா. செல்வராமன், திரு. கரையாளன் மற்றும் பேரவை உறுப்பினர்கள், தமிழ் அமைப்பினர், தமிழ்ச் சான்றோர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

- மோ. அன்பழகன்

சிந்தனை வட்டம்

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அருளியுள்ளபடி, ஏழ்மை, வறுமை, தீண்டாமை, வேற்றுமை, வன்முறை முதலியன இல்லாத வளமான இந்தியாவை உருவாக்கப்பாடுபடுவோமாக!

"செயலாகாத சிந்தனை பயன் தராது" என்பது பொன்னம்பல அடிகளாரின் பொன்மொழி போற்றுதற்குரியது.

"பெரியாரைப் பிழையாமை" என்ற அதிகாரத்தில் வந்துள்ள ஆட்சியாளரின் சினத்திற்கு ஆளானவர் எங்குச் சென்றும் வாழ இயலாது ; ஆனால் அந்த ஆட்சியாளரும் உயர்ந்த கொள்கையுடைய பெரியோரின் சினத்திற்கு ஆளானால் ஆட்சி இழந்து கெடுவர் என்ற கருத்துகள் கருதிப் பார்க்கத்தக்கன.

"அருளாலயக் கச்சத்தீவு" என்ற தலைப்பின் கீழ் வந்துள்ள பாக்கள் சிறப்பாய் உள்ளன. அவற்றை இயற்றிய என் நண்பர் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்களுக்குப் பாராட்டுக்கள். கட்சத்தீவை மீட்க மைய அரசு தீவிரமாக முயலவேண்டும்.

தண்டியடிகள் இரண்டு கண்கள் இல்லாதிருந்தும் தூர்ந்துபோன திருக்குளத்தைத் தோண்டும் திருப்பணியைச் செய்ததைப் போல கிராம மக்கள் பழங்காலத்தில் செய்ததுபோல தம் ஊரிலுள்ள ஏரி, குளம், முதலிய நீர்நிலைகளை தூரெடுத்துச் சீர் செய்ய வேண்டும்.

என் இனிய நண்பர். முத்தமிழறிஞர், பெரும்புலவர், ப. அரங்கசாமி அவர்கள் இயற்றியுள்ள "திருமுக்கால்" சிறப்பாயுள்ளது. அதில் பொன்னம்பல அடிகளாரின் திறத்தை சிறப்பை நன்கு விளக்கியுள்ளார். பாராட்டுக்கள்.

நான் மாணவனாயிருந்தபேது கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டேன். அந்தக் கட்டுரைகளை மதிப்பீடு செய்த மகாவித்துவான் சி. அருணை வடிவேல் முதலியார் என் கட்டுரையை முதற்பரிசுக்கு உரியதாகத் தேர்ந்தெடுத்ததோடு ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய "ஊரும் பேரும்" என்ற நூலை எனக்குப் பரிசளித்தார். அவரிடம் பரிசுபெறும் பேற்றைப் பெற்றேன். அவர் எழுதியுள்ள "தமிழ் அருச்சனை" என்ற கட்டுரைத் தொடர் சிறப்பாயுள்ளது.

புலவர் திருக்குறள் நாவை சிவம் எழுதியுள்ள "திருவள்ளுவம் போற்றி" போற்றுதற்குரியது.

84 அகவைக்கு மேல் வாழ்ந்த, சைவத்துக்கும் செந்தமிழுக்கும் சிறந்த பணியாற்றிய தெய்வத்திரு மா. பட்டியப்பனாரைப் பற்றி அறிந்துகொள்ளும் பேற்றைப் பெற்றேன்.

"பட்டீசர் பாதமலர் அணைந்தாயோ" என்ற அடி பட்டீசர் பாதமலர் அணைந்தாயோ? என்று இருக்கலாம்.

– **ச.மு. விமலானந்தன்**, திருப்புத்தூர்.

தமிழ்வழிபாட்டு இயக்கத்தின் நல்லதொரு தூணாய் இருந்த எங்கள் ஆசான் வித்துவான் கோட்டீசுவரன் என்னும் பட்டியப்பனார் மறைவு பற்றிய செய்தியை வெளியிட்டு இரங்கல் தெரிவித்திருந்தீர்கள். உள்ளபடியே இக்காலத்தில் அய்யாவின் தமிழ்த் திருமுறைப்படி நடத்தப்பெற்ற திருமணங்கள் அளப்பரியது. எமது திருமணத்திற்கும் அவர் வருகை தந்து வாழ்த்திய பொன்றாப் புகழ்த் திருவுருவை மறக்க இயலாது. அய்யாவின் புகழ் ஓங்கவும் அவர்தம் மணிவாசகர் அரும்பணி மன்றப் பணிகள் மேலும் சிறப்பமையவும் அன்னாரின் ஆன்மா விழைவும் ஆசியும் என்றும் நின்று நிலைக்கும்.

– **ம. இங்கீரன்**, மாச்சம்பாளையம்

குன்றக்குடி ஆதீனக் குருபூசை விழா

நமது குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனக் குருமுதல்வரின் குருபூசைவிழா 15.09.2008 இல் திருவண்ணாமலையிலும், 16.9.2008இல் குன்றக்குடியிலும் சிறப்பாக நிகழ்ந்தது. 15.9.2008 திங்கள்கிழமை காலை 8.00 மணியளவில் திருவண்ணாமலை பெரிய கோபுர முகப்பில் இருந்து வேட்டம்வலம் சாலை ஆதி குருமுதல்வர் குருமூர்த்தம் வரை குருமுதல்வர் திருவருள்திரு தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகளின் திருவுருவப்படம் திருவீதி உலாவாக எழுந்தருளச் செய்யப்பட்டது. இந்தத் திருவீதி உலாவில் நூற்றுக் கணக்கான அன்பர்கள் கலந்து கொண்டனர். காலை 10.00 மணியளவில் திருவண்ணாமலை குருமூர்த்தத்தில் திருவருள் திருகுருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களால் சிறப்பு வழிபாடு நடத்தப்பெற்றது.

16.09.2008 செவ்வாய்க்கிழமை காலையில் குன்றக்குடியில் குருமூர்த்த வழிபாடும், அருள்தரு காளத்திநாதர் சிறப்பு வழிபாடும், திருவருள்திரு குருமகா சந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. அன்று காலை 8.30 மணியளவில் குருமுதல்வர் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் குன்றக்குடி நான்குரத வீதிகளிலும் எழுந்தருளச் செய்யப்பட்டது. மகா சந்நிதானம் அவர்களும், நூற்றுக்கணக்கான அன்பர்களும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலம் நிறைவெய்தி சரியாக 10.00 மணியளவில் ஆதீனக் கொலுமண்டபத்தில் நூல் வெளியீட்டு விழா தொடங்கியது திரு. ஏ.எம்.சம்பந்தமூர்த்தி இறைவணக்கம் பாடினார். திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் முன்னிலை வகிக்க, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மேதகு நீதியரசர் திருமிகு. V. இ ராமசுப்பிரமணியன் அவர்கள் தலைமை வகித்து, பேராசிரியர் திரு.சோ. சேதுபதி அவ்கள் எழுதிய ?அற்புதத் துறவி அடிகளார்? என்ற நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். அறநெறி அண்ணல் சிவத்திரு ப. மூக்கப்பிள்ளை அவர்கள் நூலின முதற்படியினை பெற்றுக்கொண்டார். பொற்கிழிக் கவிஞர் திரு.சொ.மீ.சுந்தரம் அவர்கள் "குழைத்த சொல்மாலை" என்னும் தலைப்பில் திருவாசகம் பற்றி அருமையானதொரு சொற்பொழிவாற்றினார். திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள் பிற்பகல் 2.30 மணியளவில் மதுரை சிவத்திரு முனைவர் தி. சுரேஷ்சிவம் குழுவினரின் திருமுறை இசையரங்கு நடைபெற்றது.

மாலை 4.30 மணியளவில் பாராட்டுவிழா நடைபெற்றது. திருவருள்திரு குருமகர்சந்நிதானம் அவர்கள் பி.ஆர்.பி. ஏற்றுமதி நிறுவன உரிமையாளர் திரு. பி. பழனிச்சாமி அவர்களுக்கு "அறமனச்செம்மல்" என்னும் பட்டம் முங்கிப் பாராட்டிச் சிறப்பித்து அருளினார்கள். பிள்ளையார்பட்டி அருள்திரு கோவிந்தானந்தா சுவாமிகள் அவர்கள், பேராசிரியர் திரு.கு. ஞானசம்பந்தம் அவர்கள் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருமிகு. முனைவர். P. ராமசாமி அவர்கள் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். பாராட்டுப் பெற்ற திரு. பி. பழனிச்சாமி அவர்கள் ஏற்புரையாற்றினர். நிகழ்ச்சி இணைப்புரை பேராசிரியர் திரு. சொ. சேதுபதி அவர்கள் ஆற்றினார். நன்றியுரைக்குப்பின் மங்கல வாழ்த்துடன் சமய இலக்கிய நிகழ்ச்சிகள் இனிதே நிறைவெய்தின. இரவு 8.00 மணியளவில் திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் கொலுவீற்றிருந்தருளினார்கள். அன்பர்கள் நூற்றுக்கணக்கானோர் கொலு தரிசனம் செய்து கொண்டனர் இவ்வாறு குருபூசைவிழா மிகச்சிறப்பாக இனிதே நிறைவெய்தியது.

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

Phone: **04577 - 264567 Mobile : 94433 64200**

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இயக்குநர்

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி 2.கணிப்பொறி பயிற்சி 3. எலக்ட்ரிக்கல் வயரிங் மற்றும் ரிப்பேரிங் 4. மின்அணுக்கருவிகள் பழுதுபார்த்தல் 5.வெல்டிங் பயிற்சி பற்றவைத்தல் 6.சீட் மெட்டல் உற்பத்தி 7.பைபர்கிளாஸ் பொருள்கள் உற்பத்தி 8.கட்டிட தொழில்நுட்பம், பொருள்கள் உற்பத்தி 9.இரண்டு நான்கு சக்கர வாகன பராமரிப்பு மற்றும் ரிப்பேரிங் 10.கயிறு மற்றும் பாய் தயாரித்தல் 11. குளிர்சாதனப் பெட்டிகள் ரிப்பேரிங் 12.வார்ப்பு உலோக உற்பத்தி 13.ஹாலோ பிளாக் & மொசைக் கற்கள் தயாரித்தல் 14. சாக்பீஸ், மெழுகுவர்த்தி தயாரித்தல் 15. கம்ப்யூட்டர்சாம்பிராணி, பினாயில் தயாரித்தல் 16. மருத்துவ உதவியாளர் 17.மருத்துவ உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் கையாளுதல் 18. திரை அச்சு வேலைகள் 19. வீட்டு உபகரணப் பொருட்கள் பழுதுபார்த்தல் 20.யோகா ஆசிரியர் பயிற்சி 21. ஓவியம் மற்றும் வரைபடம் வரைதல் 22. கைவினைப்பொருட்கள் தயாரித்தல் 23. உணவுப் பொருட்கள் தயாரித்தல் 24. கேஸ் வெல்டிங் 25. தொழில்முனைவோர் மேம்பாட்டுப்பயிற்சி 26. இயற்கை உயிர் உரம் மண்புழு தயாரித்தல் 27. வேளாண் சார்ந்த பயிற்சிகள் 28.தோட்டக்கலை சார்ந்த பயிற்சிகள் 29. கால்நடை சார்ந்த பயிற்சிகள் 30. மின்சாதனப்பொருட்கள் பராமரிப்பு

தகுதி	:	தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.
பயிற்சி நேரம்	:	பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.
குறிப்பு	:	ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பொதுநூலாய்ப் போற்றுவோம்

("தமிழ்மாமணி".புலவர். திருக்குறள் . **நாவை. சிவம்**)

முப்பால்போல் வழிகாட்டும் நூலெங்கு மில்லை!
மூவேந்தர் அரசுமிதை நன்குணர வில்லை!
இப்பாலும் அப்பாலும் இதன்நெறியை எண்ணி
ஏற்றகடன் செய்தாலே நன்மைவரும் நண்ணி
முப்போதும் இல்லறத்தில் அன்பறத்தை நாட்டி
முடிந்தவரை பொதுநலத்தில் அக்கறையைக் காட்டி
இப்பாரின் வாழ்வினிலே வாழ்வாங்கு வாழ்வோம்!
இனியதமிழ் இன்பத்தால் நிறைவாக வாழ்வோம்!

சதிராடும் சாதிமன இருளெல்லாம் மாய
சாய்ந்தாடும் ஏமாற்றும் பொய்களவும் சாய
எதிர்கால வாழ்வினிலே ஒளிவெள்ளம் பாய
இளைஞரெலாம் தமிழ்வழியில் அறிவியலை ஆய
புதிர்போல மயங்குகிற போக்கெல்லாம் மாற்றி
புரிகின்ற பண்பாட்டுக் கலைச்செயல்கள் ஆற்றி
பொதுமறையின் சிறப்பதனை நெஞ்செல்லாம் ஏற்றி
புகழ்பூக்கச் செய்திடுவோம் எல்லோரும் போற்றி!

ஆயிரம்பல் லாயிரமாம் ஆண்டுகளும் ஓடி
அமைவான நலமெல்லாம் பெற்றதமிழ் நாடி
வாயுரத்தால் செம்மொழியாம் மதிப்பதனைப் பெற்றோம்!
மணிமுடியாம் உயர்சொல்லால் மகிழ்வெல்லாம் பெற்றோம்!
பாயிரம்போல் விளங்குதிரு வள்ளுவத்தைப் போற்றி
பாரெல்லாம் மகிழ்வதெந்நாள் பொதுநூலாய் ஏற்றி!
தாயுரத்துப் பெருமையுடன் வள்ளுவத்தைப் பாடித்
தமிழரெல்லாம் ஒன்றிணைவோம் எழுச்சியுடன் கூடி!




அருள்நெறி முழக்கம்

ஆசிரியர் :
தவத்திரு குன்றக்குடி அடிகளார்

விலை : 40/-
பக்கங்கள் : 96பக்கங்கள்

அருள்நெறி பதிப்பகம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்





சமய வாழ்வு

விலை : ரூ. 40/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

காற்றில் வந்த கருத்துமழை

விலை : 70/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

ஆசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

திருமாறன் பதிப்பகம்
7/8 பீட்டர்ஸ் குடியிருப்பு
இராயப்பேட்டை
சென்னை - 600 014

MAKKAL CHINTHANAI - September 2008 **Price Rs. 5-00**
Date of Publication 20-09-2008
Register of News Paper for India No. 85913/81 Register No. KKD/04/2006-2008

பெறுநர்

திரு ஆதீனகர்த்தர் அவர்கள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
காரைக்குடி (வழி)

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166